# இந்திய ஒன்றியத்தில் வேறு கட்சிகளுக்கு இல்லாத சிறப்பு கழகத்தின் 23 சார்பு அணிகளுக்கு மட்டுமே உண்டு!

# தேர்தல் பணி தொடங்கியதில் கழகம் முதலிடம்! வெற்றியிலும் முதலிடம்!

## வேலூர் மாவட்ட – கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை !

**வேலூர், டிச. 9 –**

**வேலூர் மாவட்டக் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில், துணை முதலமைச்சரும் தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு எழுச்சி மிகு உரை ஆற்றினார்.**

**அப்போது அவர், `2026– சட்டமன்றத் தேர்தலில் இலக்கு–200' என்னும் கழகத் தலைவர் அவர்களின் கட்டளையை நிறைவேற்றிடும் வகையில், அவரவர் பகுதியில் தேர்தல் பணிகளைத் தொடங்கிட வேண்டுமென்று குறிப்பிட்டார்.**

இக்கூட்டத்தில் துணை முதல்வர் அவர்கள் ஆற்றிய எழுச்சி உரை வருமாறு:





பெருமைக்குரிய வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த சார்பு அணி நிர்வாகிகளான உங்களைச் சந்தித்துப் பேசுவதில் மிகுந்த பெருமை அடைகிறேன். நான் முதன்முதலாக பிரச்சார மேடை ஏறியது வேலூர் மண்ணில்தான். கழக உறுப்பினராக, இளைஞர் அணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக எனப் பலமுறை இந்த வேலூருக்கு வந்திருக்கிறேன். ஆனால், முதன்முறையாக இந்த முறை துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்று, உங்களை எல்லாம் சந்தித்து வாழ்த்துகளைப் பெற வந்துள்ளேன்.

நான் துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்டவுடன், என்னை வாழ்த்துவதற்கு தமிழ்நாடெங்கும் உள்ள கழகத்தினர் சென்னைக்குப் படையெடுத்து வந்தார்கள். அப்போது, ``ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வந்து, நானே உங்களைச் சந்திக்கிறேன், நீங்கள் யாரும் தயவுசெய்து சென்னைக்கு வராதீர்கள். உங்களின் மாவட்டத்திற்கே வந்து உங்கள் வாழ்த்துகளைப் பெற்றுக்கொள்கிறேன்” என்றேன். அதன்படி, உங்களின் வாழ்த்துகளைப் பெற இன்றைக்கு வேலூர் மாவட்டத்திற்கு வந்திருக்கிறேன்.

**வேலூரும் கழகமும் நெருக்கம்**

இந்த வேலூர் மாவட்டத்தை `கழகத்தின் கோட்டை' என்று சொல்கிற அளவுக்கு, வலிமையான மாவட்டமாக நீங்கள் மாற்றி வைத்திருக்கிறீர்கள். இந்த மாவட்டத்தில் கலைஞரின் கால் படாத இடமே கிடையாது. இன்னும் சொல்லப் போனால், நம் கழகத் தலைவர் அவர்கள் கொடியேற்றாத ஊரே கிடையாது. அந்த அளவுக்கு வேலூருக்கும், கழகத்துக்கும் மிகுந்த நெருக்கம் உண்டு.

நடந்து முடிந்த 2024 வேலூர் மக்களவைத் தொகுதியில்கூட சகோதரர் கதிர் ஆனந்த் அவர்களை 2 லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற வைத்துள்ளீர்கள். அந்த வெற்றிக்காக உழைத்த உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**2026 -இல் சட்டமன்றத் தேர்தல்**

2026 -இல் சட்டமன்றத் தேர்தல் வரவுள்ளது. சட்டமன்றத் தேர்தலுக்கான பணிகளை, நம் கழகம்தான் முதன்முதலில் தமிழ்நாட்டில் ஆரம்பித்துள்ளது. எப்படி நாம் முதலில் ஆரம்பித்து இருக்கிறோமோ, அதேபோல் வெற்றிபெற்று முதல் இடத்திற்கும் நம்முடைய கழகம்தான் வரவேண்டும். அது உங்கள் கையில்தான் இருக்கிறது.

தலைமையில் இருந்து சட்டமன்றத் தேர்தல் பணிகளை ஒருங்கிணைக்க நம் முதலமைச்சர் அவர்கள் ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்தார். அதே போல களத்தில் தேர்தல் பணிகளை மேற்கொள்ள, ஒவ்வொரு தொகுதிக்கும் தொகுதி பார்வையாளர்களையும் அமைத்தார்கள். அதன் அடுத்தகட்டமாகத்தான், தலைவர் அவர்கள், ஒவ்வொரு மாவட்டத்திற்கு செல்லும்போதும் சார்பு அணிகளைச் சந்தித்து அவர்களுடன் ஆலோசனை நடத்தவேண்டும் என்று கட்டளையிட்டார். அதன்படிதான் இன்றைக்கு இந்த நிகழ்ச்சி நடந்துகொண்டு இருக்கிறது.

**23 சார்பு அணிகள்**

இந்திய ஒன்றியத்திலேயே வேறு எந்த கட்சிக்கும் இல்லாத ஒரு சிறப்பு, நம் கழகத்துக்கு இருக்கிறது என்றால் அது, 23 சார்பு அணிகள்தான். சார்பு அணிகளுக்கு ஆங்கிலத்தில் யூத் விங், ஐ.டி விங், விமன்ஸ் விங் என்று சொல்கிறோம். `விங்ஸ்' என்றால் தமிழில் சிறகுகள் என்று அர்த்தம். சிறகுகளாகிய நீங்கள் சிறப்பாக செயல்பட்டுப் பறந்தால்தான் அந்த வெற்றியை நாம் பெற முடியும். அதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கழகத்துக்கு எப்படி ஒரு வரலாறு இருக்கிறதோ, அதேபோல கழகத்தின் ஒவ்வொரு அணிக்கும் ஒரு வரலாறு இருக்கிறது. இந்தி எதிர்ப்புப் போராட்டம் என்று எடுத்துக்கொண்டால், அது மாணவர் அணியின் வரலாறு. இளைஞர்களை கொள்கைமயப்படுத்தியது என்றால், இளைஞர் அணியின் வரலாறு. இப்படி ஒவ்வொரு அணிக்கும் ஒரு வரலாறு இருக்கிறது. மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, தொழிலாளர் அணி, சிறுபான்மையினர் அணி என்று ஒவ்வொரு அணிக்கும் இப்படித் தனிச்சிறப்புகள் உண்டு.

**உழைப்பால் வந்தவர்**

இளைஞர் அணியில் இருந்து வந்தவர்தான் நம் முதலமைச்சர் அவர்கள். இந்த மாவட்டத்தைச் சேர்ந்த கழகப் பொதுச்செயலாளர் அவர்கள், மாணவர் அணியில் இருந்து தன் உழைப்பால் வந்தவர். மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வழக்கறிஞர் அணி என்று பல்வேறு அணிகளிலிருந்து அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் உழைப்பால் இந்த இடத்தை அடைந்திருக்கிறார்கள்.

சார்பு அணி என்று பார்த்தீர்கள் என்றால், கழக அமைப்பில் முக்கிய பொறுப்புகளில் பணியாற்றுவதற்கான பயிற்சிக்களம்தான் இந்த சார்பு அணி. அதனால், சார்பு அணிகளுக்கான முக்கியத்துவம் எப்போதும் இருந்துகொண்டுதான் இருக்கும். ஆகவே, சார்பு அணி நிர்வாகிகள், நாம் வெறும் சார்பு அணிதானே, தலைமைக் கழகத்தில் இல்லையே என்று இருந்திடக் கூடாது.

**ஒவ்வொருவரும் 200 வாக்குகள்**

நீங்கள் ஒவ்வொருவரும் 200 வாக்குகள் சேகரித்தால் போதும். நீங்கள் சொன்னால், அந்த 200 பேரும் கேட்பார்கள் என்ற நிலைமைய உருவாக்கிவிட்டீர்கள் என்றால், உங்களை யாராலும் தவிர்க்க முடியாது. அவர்கள் தானாகவே முக்கியத்துவத்தைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும். ஆகவே, 4 பூத் அல்லது 5 பூத்தை உங்களுடைய பொறுப்பு என்று எடுத்துக் கொண்டு, அங்கே தீவிரமாகக் களப்பணி ஆற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பணியை, கடமையை நீங்கள் சரியாக செய்துகொண்டு வந்தீர்கள் என்றால், கண்டிப்பாக உங்களுக்கும் உரிய நேரத்தில் கழகத் தலைவர் அங்கீகாரத்தை நிச்சயம் கொடுப்பார்.

**மக்கள் நலத்திட்டங்கள்**

இந்த மூன்றரை வருடத்தில் ஏராளமான மக்கள் நலத்திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு கொடுத்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டம், ஒவ்வொரு தாலூகா, ஒவ்வொரு ஊர், ஒவ்வொரு வீடு, ஏன் ஒவ்வொரு தனிமனிதருக்கும் தேவையான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார். இதை மக்களிடம் சென்று சேர்த்து, தொடர்ந்து பேசி, அவர்களுக்கு, அதை ஞாபகப்படுத்த வேண்டும். உதாரணத்திற்கு சில திட்டங்களை மட்டும் இங்கு சொல்ல விரும்புகிறேன்.

ஆட்சிக்கு வந்த முதல் நாளில், மகளிர் விடியல் பயணத் திட்டத்தில் முதல் கையெழுத்திட்டார் நம் முதலமைச்சர் அவர்கள். அந்தத் திட்டத்தில் இந்த மூன்றரை வருடத்தில் 580 கோடிப் பயணங்களை, மகளிர் கட்டணமில்லாமல் பேருந்துகளில் மேற்கொண்டு இருக்கிறார்கள். இதன்மூலம் ஒவ்வொரு மகளிரும் சராசரியாக 900 ரூபாய் மாதம் ஒன்றுக்குச் சேமிக்கிறார்கள்.

பெண்களுக்குப் புதுமைப்பெண் திட்டம், ஆண்களுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் வாயிலாக, உயர்கல்வி படிக்கும் 7 லட்சம் மாணவ- மாணவியருக்கு மாதம் 1,000 ரூபாய் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டம் மூலமாக 20 லட்சம் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள். கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டத்தின் வாயிலாக, மாதந்தோறும் 1 கோடியே 16 லட்சம் மகளிர் பயன்பெறுகிறார்கள். நிச்சயம், ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு பயனாளியாவது இத்திட்டத்தில் இருப்பார்கள். ஆகவே, நம் சாதனைத் திட்டங்களை, அவர்களிடம் திரும்பத் திரும்ப நினைவூட்டிக்கொண்டே இருக்க வேண்டும்.

**சந்தித்துப் பேசுங்கள்**

தேர்தலுக்கு முன்பாக ஒவ்வொரு வாக்காளரையும் குறைந்தது மூன்று அல்லது நான்குமுறை சந்தித்துப் பேசுங்கள். பொதுமக்கள் கோரிக்கைகள் அல்லது வேண்டுகோள் வைத்தார்கள் என்றால், உங்களால் முடிந்தவரை அதை சரிசெய்ய பாருங்கள். அப்படி உங்களால் முடியாதவற்றை, அங்கு இருக்கின்ற மக்கள் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களிடம் சொல்லி, அதை சரி செய்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

ஏற்கெனவேதலைவர்கூறியதுபோல, ஒரு நாளில் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் கழகத்துக்காக நீங்கள் உழைக்க வேண்டும். வார கடைசியில் ஒரு நாள் முழுக்க கழகத்துக்காக முழுவதுமாக உழைப்பைச் செலுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலைச் சரிபார்ப்பது, நடுநிலையான வாக்காளர்களை கழக ஆதரவாளர்களாக மாற்றுவது போன்ற பணிகளை நீங்கள் இன்றிலிருந்தே தொடங்க வேண்டும். உங்களுக்கான வழிகாட்டுதல்களைத் தலைமைக் கழகமும், மாவட்டக் கழகமும் வழங்கும். வாக்காளர்களைச் சந்திக்க, கருத்தரங்கம், தெருமுனைக் கூட்டம், நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி, உதவி முகாம் என்று எளிமையான நிகழ்ச்சிகளாக நடத்தினாலே போதும்.

**சமூக வலைத்தளம்**

களம் எவ்வளவு முக்கியமோ அதே அளவு முக்கியம் சமூக வலைத்தளம். உண்மை எவ்வளவு வேகமாக பரவுகிறதோ, அதைவிட பொய்களும், வதந்திகளும் அதிகமாகப் பரப்பப்படுகின்றன. ஆனால், நம் கழகத்திற்கு மிகப்பெரிய வரலாறு இருக்கிறது. எனவே, களத்தில் எப்படி உழைக்கிறோமோ, அதே போல சமூக வலைத்தளங்களிலும் நீங்கள் கழக வரலாற்றைப் பரப்ப வேண்டும். ஸ்மார்ட்டாக அதில் செயல்பட வேண்டும். எல்லா ஊடகங்களும் உண்மையைச் சொல்லுமா என்று தெரியாது. அதனால், நீங்க ஒவ்வொருவரும் உண்மையான தி.மு.க-வின் ஊடகமாகச் செயல்பட வேண்டும்.

2026-ஆம் ஆண்டு தேர்தலில் கழக அணி 200 தொகுதிகளுக்கு மேல் வெல்லும் என்று, நம் தலைவர் அவர்கள் உறுதியாக சொல்லியிருக்கிறார் என்றால், உங்கள் மீது இருக்கின்ற நம்பிக்கைத்தான் காரணம். அந்த இலக்குமட்டும்தான் நம் கண்களுக்குத் தெரிய வேண்டும். 2026-ல் நிச்சயம் 200 தொகுதிகளுக்கு மேல் கழக அணி வெல்லும், அதற்கு சார்பு அணிகளின் பங்களிப்பு முக்கியமானதாக இருக்க வேண்டும். சார்பு அணி சாதனை அணியாக, கழகம் உங்களை சார்ந்து இருக்கிறது என்பதை நீங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் 100 சதவிகிதம் அல்ல, 200 சதவிகிதம் உழைக்க வேண்டும். அதற்குத் தயாராக இருக்க வேண்டும்.

**அணி, அணியாகச் செல்வார்கள்**

போருக்கு போகும்போது கும்பலாகச் செல்லமாட்டார்கள். அணி, அணியாகத்தான் செல்வார்கள். திட்டம்போட்டுத்தான் செல்ல வேண்டும். ஒவ்வொரு அணியும் திட்டமிட்டு அந்தப் போரை எதிர்கொண்டோம் என்றால், நிச்சயம் வெற்றி நமக்குத்தான். ஆகவே, நாம் அணி அணியாகச் சென்று 2026 தேர்தல் ஜனநாயகப் போரில் நிச்சயம் வென்று காட்டுவோம். அந்த உறுதியோடு அடுத்த வருகின்ற ஒவ்வொரு நாளும் செயல்படுவோம்.

இங்கே இருக்கின்ற 23 அணிகளும் நாம் அந்த அணி தானே, இந்த அணி தானே என்று பார்க்காமல், நாம் அத்தனைபேரும் ஒரே அணியாக, கலைஞர் வழியில் வந்த தலைவர் அணி என்பதை மட்டும் மனதில் வைத்து செயல்பட வேண்டும். 2026-இல் ஏழாவது முறையாக கழகத்தை ஆட்சியில் அமர்த்தியே ஆக வேண்டும். நம் தலைவர் அவர்களைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சராக அமர்த்த வேண்டும். இதுமட்டும்தான் நம் உறுதிமொழி, நம் ஒரே நோக்கமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் எழுச்சியுரை ஆற்றினார்.

**பங்கேற்றவர்கள்**

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் இசை, சட்டமன்ற உறுப்பினர்கள் கார்த்திகேயன், அமுலு விஜயன், மாநராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்டக் கழக முன்னாள் செயலாளர் முகமது சஹி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் பாபு, துணை மேயர் சுனில் குமார் மற்றும் கழக, சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னணியினர், இளைஞர் அணியினர் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

---

### சிவகங்கையில் ரூபாய் 79 லட்சத்தில்

## 215 மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்!

*சிவகங்கை, டிச. 9 -*

சிவகங்கையில் மாற்றுத்திறனாளிகள் மாநாடு மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கே. பாலகிருஷ்ணன் வரவேற்றுப்பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் எஸ். மாங்குடி எம்.எல்.ஏ .சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர்த.சேங்கை மாறன், சிவகங்கை மஞ்சுளா பாலச்சந்தர் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள் நிகழ்ச்சியில் 215 மாற்று திறனாளிகளுக்கு ரூபாய் 78 லட்சத்து 83 ஆயிரத்து 141 மதிப்பிலான பல்வேறு உபகரணங்களை பேட்டரி நாற்காலிகள், தையல் இயந்திரம் 3 சக்கர சைக்கிள், காது கேட்கும் கருவி ,உட்பட பல்வேறு உபகரணங்களை வழங்கி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் மாற்றுத்திறனாளிக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தலைவர் கலைஞர் முதல்வராக இருந்த பொழுது நீங்கள் பல்வேறு வழியில் அழைக்கப்பட்டிர்கள் உங்களை தலைவர் கலைஞர் அவர்கள் அவருடைய புல மைத் திறனால் மாற்றுத்திறனாளி என்று பெயர் சூட்டினார் . அதுமுதல் இந்த பெயரில் அழைக்கப்பட்டு வருகிறீர்கள். தனது பொறுப்பிலேயே மாற்றுத்திறனாளி துறையும் வைத்துக் கொண்டு மாற்றுத்திறனாளி களுக்கு எண்ணற்ற உதவிகளை வழங்கினார் .அதே வழியில் திராவிட மாடலின் முதல்வர் தளபதி அவர்களும் மாற்றுத்திறனாளி. துறையை தனது பொறுப்பில் வைத்துக் கொண்டு பல்வேறு வகையிலான உதவிகளை செய்து வருகிறார். உங்களின் சுமை தாங்கியாக தளபதி அவர்கள் விளங்கி வருகிறார் .ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பொழுது உங்களை பத்து ஆண்டுகள் ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளவில்லை தளபதி அவர்கள் முதல்வராக பொறுப்பேற்றதும் உங்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் தேவைப்படும் உதவிகளை செய்து தருமாறு உத்தர விட்டுள்ளார் .இதுவரை சிவகங்கை மாவட்டத்தில் ஒன்றிய வாரியாக முகாம்கள் நடத்தப்பட்டு 5465 மாற்றுத்திறனாளிகள் கண்டறியப்பட்டுள்ளார் கள் .தொடர்ந்து இந்த அரசு தலைவர் கலைஞர் வழியில் முதல்வர் தளபதி அவர்கள் மாற்றுத்திறனாளிக ளுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகளை செயல் படுத்தி வருகிறார். அவருக்கு உங்கள் ஆதரவினை தர வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் .இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார். திருமதி பிரியா நன்றி கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் கோட்டாட்சியர் விஜயகுமார் , வட்டாட்சியர் சிவராமன் ,ஒன்றிய கழக செயலாளர்கள் எம். ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம்,துரைராஜாமணி, எம்.அண்ணாதுரை, மானாமதுரை நகர் கழக செயலாளர் க. பொன்னுச்சாமி , மானாமதுரை ஒன்றிய குழு துணைத் தலைவர் முத்துசாமி மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் ,துணை அமைப்பாளர் கள் திலகவதி கண்ணன், மார்க்ரெட் கமலா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், ,நகர் மன்ற துணை த்தலைவர். எம். கார்கண் ணன். கவுன்சிலர் ராஜேஸ்வரி ராம் தாஸ் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தொண்டரணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, கழக பவளவிழா மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா ஒழுகினசேரி மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் தொண்டர் அணி அமைப்பாளர் எம்.ஜே.ராஜன் தலைமையில் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு சிறப்புறையாற்றி 10 மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவி தொகையும், 150 பேர்களுக்கு புத்தாடைகளும் போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் தில்லை செல்வம், மாநகர செயலாளர் ப.ஆனந்த், F.M.இராஜரத்தினம், பாபு, சுரேந்திரகுமர், தாமரைபாரதி, ஜவஹர், சேக் மீரான், ஜீவா, சதாசிவன், கோலப்பன், ஜாப்ரின், மணிகண்டன், ரெனிஸ்குமார் உட்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்அவர்கள் நேற்று முன்தினம் (7.12.2024) இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட வாலாஜாபேட்டை பேருந்து நிலையத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர். காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர்.எஸ். ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல். ஈஸ்வரப்பன், ஏ.எம். முனிரத்தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா, மாவட்ட வருவாய் அலுவலர் ந. சுரேஷ், மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.